டாக்டர் எச். வி. ஹாண்டே : பாலன்ஸ் ஷீட் இல்லாமல், எவ்வளவு இன்வெஸ்ட் செய்யப்பட்டிருக்கிறது; எவ்வளவு டெப்பிரிசியேஷன், என்றெல்லாம் எப்படி நாங்கள் பார்ப்பது. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் வரவில்லை என்று சொல்லியிருக்கிறீர்கள். அமைச்சர் அவர்கள், அவருக்கு வந்ததும் அந்த வரவு-செலவு பேப்பரைக் கொடுத்து விடுகிறேன் என்று சொல்லியிருக்கிறார்கள். இப்பொழுது அமைச்சர் திரு. இராமச்சந்திரன் அவர்கள் நிதிக் கோரிக்கைகள் மீது வாக்கெடுப்புக்கு தீர்மானங்களை முன்மொழியட்டும்.

(7) 1975–76 ஆம் ஆண்டுக்கான நிதிக் கோரிக்கைள் மீது வாக்கெடுப்பு—(தொடர்ச்சி).

(அ). நிதிக் கோரிக்கை எண் 3—மோட்டார் வண்டிகள் சட்டங்கள்—நிர்வாகம்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களின் பரிவுரையின் மேல், கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன் :

"நிதிக் கோரிக்கை எண் 3—மோட்டார் வண்டிகள் சட்டங்கள்—நிர்வாகம் என்ற தலைப்பின் கீழ் ரூ. 77,06,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்."

Thiru N. DENNIS : Sir, to discuss policy, I move :—

"That the allotment of Rs. 77,06,000 under Demand No. 3—Motor Vehicles Acts—Administration be reduced by Rs. 100".

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : பேரவைத் தலைவர் அவர்களே, கிராமப் பகுதிகளில் சிறிய பேருந்துகளை விட்டு பொது மக்களுக்குப் போக்குவரத்து வசதியினைப் பெருக்க வேண்டிய அவசியம் பற்றி விவாதிக்க—

"நிதிக் கோரிக்கை எண் 3—மோட்டார் வண்டிகள் சட்டங்கள்—நிர்வாகம் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 77,06,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்." என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

திரு. எம். சுரேந்திரன் : பேரவைத் தலைவர் அவர்களே, அனுமதி பெற்ற நடத்துனர்களின் கல்வித் தகுதியை கணக்கில் எடுக்காமல் வேலை வாய்ப்பு அளிப்பது குறித்து விவாதிக்க—

" நிதிக் கோரிக்கை எண் 3—மோட்டார் வண்டிகள் சட்டங்கள்—நிர்வாகம் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 77,06,000-இல் ரூ. 100 குறைக்க வேண்டும்." என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

THIRU K. T. K. TANGAMANI : Sir, to discuss about the need to rectify abuses in the matter of transfer of bus permits, I move :—

" That the allotment of Rs. 77,06,000 under Demand No. 3—Motor Vehicles Acts—Administration be reduced by Rs. 100''.

(ஆ) நிதிக் கோரிக்கை எண் 40—சாலைப் போக்குவரத்துப் பணிகள்.

. . . . .

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களின் பரிவுரையின் மேல், கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன் :

" நிதிக் கோரிக்கை எண் 40—சாலைப் போக்குவரத்துப் பணிகள் என்ற தலைப்பின் கீழ் ரூ. 8,08,43,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்."

திரு. கே. என். குமாரசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, பஸ் தேசிய உடமையாக்குவது பற்றி விவாதிக்க—

" நிதிக் கோரிக்கை எண் 40—சாலைப் போக்குவரத்துப் பணிகள் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்படுகிற ரூ. 8,08,43,000 இல் ரூ. 100 குறைக்க வேண்டும்." என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

THIRU J. JAMES : Sir, to discuss about the necessity to form a single Transport Corporation for the entire State amalgamating all the existing Corporations, I move :—

" That the allotment of Rs. 8,08,43,000 under Demand No. 40; Road Transport Services be reduced by Rs. 100 ".

திரு. கே. டி. கே. தங்கமணி : பேரவைத் தலைவர் அவர்களே, போக்கு-வரத்துச் சட்டமன்ற உறுப்பினர்களின் ஆலோசனைக் குழு அமைப்பது பற்றி விவாதிக்க—

"நிதிக் கோரிக்கை எண் 40—சாலைப் போக்கு-வரத்துப் பணிகள் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 8,08,43,000 இல் ரூ. 100 குறைக்க வேண்டும்" என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

திரு. கோவை செழியன் : தலைவரவர்களே, அரசுப் பேருந்துகளில் அதிக அளவு புகை வருவதால் பொதுச் சுகாதாரம் பாதிக்கப்படுவது குறித்து விவாதிக்க—

"நிதிக் கோரிக்கை எண் 40—சாலைப் போக்கு-வரத்துப் பணிகள் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 8,08,43,000 இல் ரூ. 100 குறைக்க வேண்டும்" என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

(இ) நிதிக் கோரிக்கை எண் 44—எழுதுபொருள்-அச்சுத்துறை.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, ஆளுநர் அவர்களின் பரிவுரையின்மேல் கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

"நிதிக் கோரிக்கை எண் 44—எழுதுபொருள் அச்சுத் துறை என்ற தலைப்பின்கீழ் ரூ. 5,93,26,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்."

டாக்டர் எச். வி. ஹாண்டே : தலைவரவர்களே, சட்ட மன்ற நடவடிக்கைப் புத்தகங்கள் அச்சிட்டு வழங்குவதில் ஏற்படும் காலதாமதத்தினைத் தவிர்க்க வேண்டியது குறித்து விவாதிக்க—

"நிதிக் கோரிக்கை எண் 44—எழுதுபொருள்-அச்சுத் துறை என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 5,93,26,000 இல் ரூ. 100 குறைக்க வேண்டும்." என்ற வெட்டு தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

THIRU K. T. K. TANGAMANI : Sir, to discuss about the demands of workers in the Government Press, Madras, I move—

That the allotment of Rs. 5,93,26,000 under Demand No. 44 —Stationery and Printing—be reduced by Rs. 100.